## ஆலந்தூர் தொகுதியில் உள்ள 431 பாகங்களிலும்

# பாகம் வாரியாக வாக்காளர் பட்டியலை சரிபார்க்கும் பணியில் மும்முரமாக ஈடுபடுவீர்!

### மாவட்டச் செயலாளர் – அமைச்சர் தா.மோ. அன்பரசன் வேண்டுகோள்!

சென்னை, மார்ச்.19-

ஆலந்தூர் சட்டமன்றத் தொகுதியில் அடங்கி உள்ள 431 பாகங்களிலும் பாகம் வாரியாக வாக்காளர் பட்டியலை சரி பார்க்கும் பணியில் மும்முரமாக ஈடுபட்டு அந்தந்த வாக்காளர்கள் பட்டியலில் உள்ள வாக்காளர்களை குடும்பம் வாரியாக பிரித்து பாகம் வாரியாக தரப்பட்டுள்ள மஞ்சள் நோட்டில் கைபேசி எண்ணுடன் குறித்து ஒரு வாரத்திற்குள் இப்பணியை செய்து முடிக்க வேண்டும் என்று ஆலந்தூர் தொகுதி கழக செயல் வீரர்கள் கூட்டத்தில் பாகம் முகவர்களுக்கு மாவட்ட செயலாளர் அமைச்சர் தா.மோ. அன்பரசன் வேண்டுகோள் விடுத்துள்ளார்.



ஆலந்தூர் சட்டமன்றத் தொகுதியில் அடங்கிய பாக முகவர்கள் பி எல் 2 பிடிஏ மற்றும் பத்து பாக ஒருங்கிணைப்பாளர்கள் கலந்தாலோசனைக் கூட்டம் ஆலந்தூர் சுதந்திர பாரம் மேம்பாலம் அருகில் அமைந்துள்ள மாவட்ட கழக அலுவலகத்தில் ஆலந்தூர் வடக்கு பகுதி செயலாளர் பா. குணாளன் தலைமையில் நடைபெற்றது.

இதில் ஆலந்தூர் தெற்கு பகுதி செயலாளர் என் சந்திரன் எம்.சி. ஒன்றிய செயலாளர் வந்தே மாதரம் நகரச் செயலாளர் டி.பாபு, புனித தோமையார் மலை ஒன்றிய செயலாளர் ஜி.கே. ரவி ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

ஆலந்தூர் சட்டமன்றத் தொகுதி பார்வையாளர் பத்மப்பிரியா, மாவட்ட இளைஞரணி அமைப்பாளர் கோல்டு பிரகாஷ், பொதுக்குழு உறுப்பினர்கள் எம்.எஸ்.கே. இப்ராகிம், ஆர்.டி. பூபாலன், கீதா ஆனந்தன், மாவட்ட கழக அணிகளின் அமைப்பாளர்கள் ராஜா மார்த்தாண்டன், பி.எஸ்.எம். ஜெயகரன், தி.கா. பாஸ்கரன், கே.ஆர். ஆனந்தன், சாமுவேல், தங்கம் மற்றும் பி.எல்.ஏ.2, பி.டி.ஏ., 10 பூத் ஒருங்கிணைப்பாளர்கள் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

கூட்டத்தில் மாவட்ட செயலாளர் அமைச்சர் தா. மோ அன்பரசன் ஆற்றிய உரை வருமாறு:

அண்ணா அறிவாலயம் கலைஞர் அரங்கில் நடைபெற்ற மாவட்ட செயலாளர்கள் கூட்டத்தில் நம்முடைய காஞ்சிபுரம் வடக்கு மாவட்டத்தில் அடங்கியுள்ள 6 சட்டமன்றத் தொகுதிகளில் சட்டமன்றத் தொகுதி பணிகளை முடக்கி விட்டுள்ளோம். ஆறு தொகுதிகளிலும் பாக முகவர்கள் வீடு வீடாக சென்று வாக்காளர் பட்டியலை சரி பார்த்து பாக முகவர்களிடம் வழங்கப்பட்டுள்ள மஞ்சள் நிற பாகம் முகவர் குறிப்பேடு புத்தகத்தில் வாக்காளர் பற்றிய முழு விவரங்களை கைபேசி எண்ணுடன் குறிக்கும் பணியை மேற்கொள்ள வேண்டுகிறேன்.

ஆலந்தூர் சட்டமன்றத் தொகுதியில் அடங்கியுள்ள 431 பாகங்களிலும் பாகம் வாரியாக வாக்காளர் பட்டியலை சரி பார்க்கும் பணியில் மும்முரமாக ஈடுபட்டு அந்தந்த வாக்காளர்கள் பட்டியலில் உள்ள வாக்காளர்களை குடும்பமாக பிரித்து பாகம் வாரியாக தரப்பட்டுள்ள மஞ்சள் நோட்டில் கைபேசி எண்ணுடன் குறித்து ஒரு வாரத்திற்குள் இப்பணியை செய்து முடிக்க வேண்டும்.

இவ்வாறு அவர் உரையாற்றினார்.



சென்னை கிழக்கு மாவட்டம் கொளத்தூர் சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட கொளத்தூர் மேற்கு பகுதி நிர்வாகிகள் BLA2, BDA, BYO ஆலோசனைக்கூட்டம் நேற்று 18.03.2026 மாலை நடைபெற்ற கூட்டத்தில் இந்து சமய அறநிலைத்துறை அமைச்சர் – சென்னை கிழக்கு மாவட்ட கழகச் செயலாளர் பி.கே.சேகர்பாபு ஆலோசனை வழங்கி சிறப்புரையாற்றினார். இக்கூட்டத்தில் தொகுதி பார்வையாளர் இரா.விடுதலை, பகுதி கழகச் செயலாளர் எ.நாகராஜன் எம்.சி., சி.மகேஷ் குமார், கே சந்துரு, சரிதா மகேஷ் குமார் மற்றும் BLA2, BDA, BYO ஆகியோர் கலந்து கொண்டனர்.

## தென்காசி வடக்கு மாவட்டச் செயலாளர் ஈ.ராஜா எம்.எல்.ஏ. தலைமை!

# சங்கரன்கோவில் தொகுதி தேர்தல் பணிகள் ஆலோசனைக் கூட்டம்!

### முன்னாள் முதல்வர் ஓ.பன்னீர்செல்வம் – அமைச்சர் கே.கே.எஸ்.எஸ்.ஆர்.இராமச்சந்திரன் பங்கேற்பு!

தென்காசி. மார்ச் 19 -

தென்காசி வடக்கு மாவட்டம் சங்கரன்கோவில் சட்டமன்றத் தொகுதி 2026 தேர்தல் பணிகள் ஆலோசனை கூட்டம் சங்கரன்கோவில் ரயில்வே பீடர் சாலையில் உள்ள ஜெய் சாந்தி மகாலில் தென்காசி வடக்கு மாவட்டச் செயலாளர் ஈ.ராஜா எம்.எல்.ஏ. தலைமையில் நடைபெற்றது. மூர்த்திபாண்டியன் வரவேற்புரையாற்றினார்.

மேலநீலிதநல்லூர் கிழக்கு ஒன்றிய செயலாளர் பெரியதுரை நிகழ்ச்சியை தொகுத்து வழங்கினார்.

இந்நிகழ்வில் வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மை துறை அமைச்சர் கே.கே.எஸ். எஸ்.ஆர்.ராமச்சந்திரன், முன்னாள் முதலமைச்சர் ஓ.பன்னீர் செல்வம் ஆகியோர் பங்கேற்று சிறப்புரையாற்றினர்.

இந்நிகழ்வில் அமைச்சர் கே.கே.எஸ்.எஸ்.ஆர்.ராமச்சந்திரன் பேசியதாவது.

தேர்தல் களம் சூடு பிடித்துள்ளது.

**மிகப்பெரிய நம்பிக்கைக்குச் சொந்தக்காரர்! ஓ.பி.எஸ்.!**

தமிழகத்தில் முதலமைச்சராக பங்கேற்றவர் பண்பாளர், அம்மாவின் நம்பிக்கையை பெற்று முதல்வர் பதவியை அப்படியே கொடுத்தவர். நம்பிக்கைக்குறியவர், முன்னாள் முதல்வர் நான் சொல்லி தெரிய வேண்டியது இல்லை, மிகப்பெரிய நம்பிக்கைக்கு சொந்தக்காரர் ஓ.பி.எஸ். அவர்கள், அனைவரும் மதிக்கக் கூடிய பண்பாளர்.

மதிப்பிற்குறியவர்களை சரியான நேரத்தில் மதிப்பவர் நம்மளுடைய முதல்வர் தளபதி அவர்கள்.

இன்று அவர்களை மதித்து கட்சியில் இணைத்து தேர்தல் பிரச்சாரத்தின் உரிமையை கொடுத்து என் உட்பட அனைவருக்கும் தொலைபேசியில் சொல்லி சிறப்பான வரவேற்பு கொடுத்து வரவேற்பு அளிக்கப்பட்டுள்ளது. யார் வேண்டுமானாலும் எந்த கட்சிகளும் சேரலாம் ஆனால் சேரும் இடம் சரியா தவறா என்பது ஓ.பி.எஸ். அவர்கள் நிதானமாக யோசித்து எதை செய்தால் அவர்களை நம்பியவர்களுக்கு எதிர்காலம் இருக்கும், இந்த நாட்டுக்கு எது சரியாக இருக்கும் என்று யோசித்து நமது இயக்கத்தில் இணைந்துள்ளார். இந்தக் கட்சியிலே உழைப்பவர்களுக்கு மரியாதை உழைப்புக் கேற்ற ஊதியம் இருக்கும், உங்கள் உழைப்பு உறுதுணையாக இருக்கும் என உங்களை வரவேற்கிறேன்.

இவ்வாறு அமைச்சர் கே.கே.எஸ்.ஆர்.ராமச்சந்திரன் பேசினார்.

பின்னர் முன்னாள் முதலமைச்சர் ஓ.பன்னீர்செல்வம் பேசியதாவது.

உங்களை சந்திக்கும் வாய்ப்பை உருவாக்கித் தந்த நல்ல மனம் படைத்த கழகத் தலைவர் முதலமைச்சர் தளபதி அவர்களின் நல் ஆசியோடு ஆணையை ஏற்று இங்கு வந்துள்ளேன். வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மை துறை அமைச்சர் ராமச்சந்திரன் அவர்களையும் வரவேற்கிறேன். சங்கரன்கோவில் சட்டமன்ற தொகுதி தேர்தல் பணிகளை நடத்த மாவட்டச் செயலாளர் ராஜா எம்.எல்.ஏ. ஏற்பாடு செய்துள்ளார்.

உங்கள் கடமைகளை பணிகளை நான் அறிவேன் இந்த தேர்தலுக்கு இரண்டு ஆண்களுக்கு முன்பே நீங்கள் பணிகளை ஆரம்பித்து விழிப்புடன் செயல்பட்டு வருகிறீர்கள்!

**நன்றி சொல்ல கடமைப்பட்டிருக்கிறேன்!**

அடிப்படை பணிகள் என்ன, விஞ்ஞான பூர்வமான பணிகள் என்ன, தேர்தல் வாக்குச்சாவடிகளுக்கு செல்லும் பொழுது ஆற்ற வேண்டிய பணிகள் என்ன, வாக்குப்பதிவு என்பது நாம் கடமையுணர்வோடு வாக்காளர்களை அழைத்து சென்று வாக்குப்பதி செய்ய வேண்டிய பணிகள் என்ன என்பதை நீங்கள் எல்லாம் தொகுத்து மனதிலே நிறுத்தி வைத்திருக்கிறீர்கள். நாளை தேர்தல் வந்தாலும் அந்த தேர்தலில் வெல்லக்கூடிய பணிகளை அடிப்படை பணிகளை உணர்வுபூர்வமாக நீங்கள் மனதில் தேக்கி வைத்துக் கொண்டிருக் கிறீர்கள் என்பதை நான் நன்றாக அறிவேன். மகத்தான வெற்றி பெறுவதற்கு நல்ல பல ஆலோசனை வழங்கி கழகத்தை வழிநடத்திச் சென்று கொண்டிருக்கின்ற நம்முடைய தளபதி அவர்களுக்கு நான் நன்றி சொல்ல கடமைப் பட்டிருக்கிறேன்.

பேரறிஞர் அண்ணா, முத்தமிழ் அறிஞர் கலைஞர், புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். மற்றும் புரட்சித்தலைவி அம்மா, நம் கழகத் தளபதி அவர்கள் ஆகியோர்கள் மக்களின் ஆதரவோடு மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட முதலமைச்சர்களாகப் பதவி வகித்தனர். ஆனால், தற்போதைய எதிர்க்கட்சித் தலைவர் எடப்பாடி பழனிசாமி மக்களால் தேர்ந்தெடுக் கப்பட்டவர் அல்ல. 50 ஆண்டு கால அ.தி.மு.க.வை குறுக்கு வழியில் கைப்பற்றி, தன்னை முதலமைச்சராக ஆக்கியவருக்கே அவர் துரோகம் செய்தார். 'ஊர்ந்து சென்று' முதலமைச்சர் பதவியைப் பெற்ற அவர், பதவி கிடைத்தவுடன் கொஞ்சமும் நன்றியின்றி துரோகியாக மாறினார்.

**11 தேர்தல்களிலும் படுதோல்வி!**

தனது அடிமைகளை வைத்துக் கொண்டு கட்சியின் பொதுச் செயலாளர் பதவியையும் அபகரித்துக் கொண்டார். அவர் பொறுப்பேற்ற பிறகு நடந்த நாடாளுமன்றம், சட்டமன்றம், உள்ளாட்சி மற்றும் இடைத் தேர்தல்கள் என 11 தேர்தல்களிலும் அ.தி.மு.க. படுதோல்வியையே சந்தித்துள்ளது.

தந்தை பெரியார், பேரறிஞர் அண்ணா, முத்தமிழ் அறிஞர் கலைஞர் ஆகியோர் வழியில், ஜாதி, மத பேதமின்றி அனைத்து மக்களுக்கும் சமமான சமூக நீதியை வழங்கும் மிகச் சிறப்பான ஆட்சியை முதலமைச்சர் தளபதி அவர்கள் அளித்து வருகிறார். டெல்லியில் உள்ளவர்கள் (பாஜக) திராவிட இயக்கத்தை அழிக்க நினைத்தாலும், அதைத் தடுத்து நிறுத்தும் ஒரே சக்தியாக கழக தலைவர் முதலமைச்சர் தளபதி அவர்கள் விளங்கு கிறார். கடந்த காலங்களில் பின்தங்கியிருந்த தொழில் துறை, ஐடி மற்றும் விவசாயத் துறைகளை முதலமைச் சர் அவர்கள் மீட்டெடுத் துள்ளார். உலக முதலீட்டா ளர்களை ஈர்த்து, பல்லாயிரம் கோடி ரூபாய் முதலீடு களைக் கொண்டு வந்ததன் மூலம் லட்சக்கணக்கான இளைஞர்களுக்கு வேலைவாய்ப்புகள் உருவாக்கப்பட்டுள்ளன.

தமிழ்நாட்டில் இருந்து சுமார் 2 லட்சம் கோடி ரூபாய் நிதியை ஒன்றிய அரசு வரியாகப் பெறுகிறது. ஆனால், அதனை மீண்டும் மாநிலத்தின் வளர்ச்சிக்குத் திருப்பிக் கொடுப்பதில் ஒன்றிய அரசு கடுமையான பாரபட்சம் காட்டுகிறது. ஒன்றிய அரசு நிதி நெருக்கடி அளித்தாலும், மாநிலத்தின் சொந்த நிதியைக் கொண்டு தொலைநோக்குத் திட்டங்களை முதலமைச்சர் அவர்கள் செயல்படுத்தி வருகிறார். இதன் விளைவாக, இந்தியாவின் எந்த மாநிலத்திலும் இல்லாத வகையில் தமிழ்நாட்டின் பொருளாதார வளர்ச்சி 11.08 சதவீதமாக உயர்ந்து சாதனை படைத்துள்ளது. பார்த்துப் பார்த்து நம்முடைய தளபதி அவர்கள் அத்தனை திட்டங்களையும் தமிழ்நாட்டு மக்களுக்கு கிடைக்கக் கூடிய பலன்களையும் ஆய்வு செய்து, அது ஒரு கடைக்கோடி மக்கள் வரை போய் சேருகிறதா என்பதை அதிகாரிகள் மூலம் செய்கிறார். மக்கள் பல்வேறு திட்டங்கள் மூலமாக பலன்களை பெறுகின்றனர்.

குடும்பத் தலைவிகளுக்கான 'கலைஞர் மகளிர் உரிமைத் தொகை' திட்டத்தின் கீழ், ஒவ்வொரு மாதமும் எவ்வித தடையுமின்றி ரூ.1000 வங்கி கணக்கில் செலுத்தப்படுகிறது. தற்போது ரூபாய் 5000 ம் வங்கிக் கணக்கில் யாருக்கும் தெரியாது. இப்படி முன்னெடுத்து செல்கின்ற அரசை இந்தியாவில் இதுவரை எந்த மாநிலமும் இல்லை.

**வெற்றி மேல் வெற்றி சூரியனுக்கே!**

இதுபோன்று செயல்படுத்தப்படவில்லை. அதிகாரிகள் அளவிலான திட்டங்களை முதலமைச்சரே நேரடி யாகக் கண்காணித்து செயல்படுத்துகிறார். திருச்சியில் 9 ம் நடைபெற்ற தி.மு.க.வின் மாநாடு, இந்திய அளவிலும், உலக அளவிலும் வரலாற்றுச் சிறப்புமிக்க ஒரு மாநாடாக அமைந்தது. இது தி.மு.க. வின் வலிமையைக் காட்டுகிறது. இரண்டு ஆண்டுகளில் வரவுள்ள சட்டமன்றத் தேர்தலுக்கான பணிகளை தி.மு.க தொண்டர்கள் இப்போதே முழுவீச்சில் தொடங்கி விட்டனர்.

ஒன்பது கோள்களை இயக்கும் வல்லமை படைத்த சூரியனைப் போல, தமிழ்நாட்டில் 'உதயசூரியன்' சின்னம் மெகா கூட்டணியை வழிநடத்திச் செல்லும். வரும் சட்டமன்றத் தேர்தலிலும் தி.மு.க. தலைமையிலான கூட்டணி மாபெரும் வெற்றி பெற்று, கழகத் தலைவர் தளபதி அவர்கள் மீண்டும் தொடர்ந்து இரண்டாவது முறையாக முதலமைச்சர் ஆவது உறுதி. என்பதை இந்த நல்ல நேரத்தில் தெரிவித்துக் கொண்டு தேர்தல் காலப்பணிகளை சுறுசுறுப்பு டன் நாம் பணியாற்றி வெற்றிகனியை கழகத் தலைவர் அருமை அண்ணன் முதலமைச்சர். அவர்களிடம் ஒப்படைக்க வேண்டும். உங்களுடைய அனைவரின் ஒத்து ழைப்பும் கடமையும் ஒருங்கிணைந்து செயலாற்றி வெற்றியைத் தேடித் தாருங்கள், தேடித்தாருங்கள், நமது சின்னம், நமது சின்னம், நமது சின்னம் எதுனா பவர்ன்னா சூரியன் மற்ற கோள்களை இயக்கும் கோள்களாக தான் இருக்கும். என்பதையும் வெற்றிமேல் வெற்றி சூரியனுக்கு மட்டுமே கிடைக்கும்.

இவ்வாறு முன்னாள் முதலமைச்சர் ஓ.பன்னீர்செல்வம் பேசினார்.

நிகழ்வில் முன்னாள் எம்.பி.க்கள் ஓ.பி.ரவீந்திரநாத், கோபாலகிருஷ்ணன் முன்னாள் எம்.எல்.ஏ. அய்யப்பன், மாவட்ட அவைத்தலைவர் சுப்பையா, தலைமை செயற்குழு உறுப்பினர் சீனிவாசன், மாநில மருத்துவரணி துணைச் செயலாளர் செண்பக விநாயகம், மாநில வர்த்தக அணி இணைச் செயலாளர் முத்துச்செல்வி, மாவட் பொருளாளர் இல.சரவணன் மாவட்ட துணைச் செயலாளர்கள் மனோகரன், ராஜதுரை, புனிதா, பொதுக்குழு உறுப்பினர்கள் பராசக்தி, மாரிசாமி, மகேஸ்வரி ஒன்றிய செயலாளர்கள் பொன். முத்தையா பாண்டியன், கடற்கரை கிறிஸ்டோபர், சேர்மத்துரை, ராஜதுரை, நகர செயலாளர் பிரகாஷ், பேரூர் செயலாளர்கள் மாரிமுத்து, சேது சுப்பிரமணியன் மற்றும் கழகத்தில் இணைந்த ஓ.பி.எஸ். நிர்வாகிகள் சுப்பிரமணியன், ஐ.ஆர்.8. ராஜேந்திரன், சங்கிலி பாண்டியன் சரவணன், கணேசன், பிச்சை பாண்டியன், உள்பட கழகத்தினர் பலர் கலந்து கொண்டனர்.

நிகழ்ச்சி நிறைவில் மேலநீலதநல்லூர் தெற்கு ஒன்றியப் பொறுப்பாளர் பால்ராஜ் நன்றியுரை ஆற்றினார்.



சென்னை தென்மேற்கு மாவட்டம், மயிலை கிழக்கு – மேற்கு பகுதி திமுக சார்பில் வட்ட கழக செயலாளர்கள், பாக ஒருங்கிணைப்பாளர்கள், BLA 2 ஆலோசனை கூட்டம் 17.03.2026 அன்று மாலை, ராஜா அண்ணாமலைபுரத்தில் உள்ள முத்தமிழ் பேரவையில் நடைபெற்ற, சென்னை தென்மேற்கு மாவட்ட கழக செயலாளர் மயிலாப்பூர் சட்டமன்ற உறுப்பினர் மயிலை த. வேலு தலைமையில், மயிலை தொகுதி தேர்தல் பொறுப்பாளர் கோவி.லெனின், பகுதி செயலாளர்கள் எஸ்.முரளி, நந்தனம் கி.மதி ஆகியோர் முன்னிலையில் வருகின்ற சட்டமன்ற தேர்தல் 2026 குறித்து ஆலோசனைக் கூட்டம் நடைபெற்றது. இக்கூட்டத்தில் கழக நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

# தொலைநோக்குப் பார்வையுடன் ம.தி.மு.க. தேர்தல் அறிக்கை!

### ம.தி.மு.க. பொதுச் செயலாளர் வைகோ வெளியிட்டு பேட்டி!

சென்னை, மார்ச். 19 –

"தொலை நோக்குப் பார்வையுடன் ம.தி.மு.க. தேர்தல் அறிக்கை வெளியிடப்பட்டுள்ளது என்று ம.தி.மு.க. பொதுச் செயலாளர் வைகோ அவர்கள் கூறியுள்ளார்.



சென்னையில் ம.தி.மு.க. தேர்தல் அறிக்கையை வெளியிட்ட வைகோ செய்தியாளர்களிடம் கூறியதாவது:

சட்டமன்றத் தேர்தலை எதிர்கொள்ள ம.தி.மு.க. தேர்தல் அறிக்கை தயாரிக்க குழு அமைத்து மூன்றுவாரம் தமிழகத்தின் பல பகுதியிலிருந்து வந்த பரிந்துரைகளை செய்து 72 பக்க தேர்தல் அறிக்கை 51 பிரிவுகளை உள்ளடக்கி தயாரிக்கப்பட்டுள்ளது. கொள்கை லட்சியங்கள், நிறைவேற்ற வேண்டிய திட்டங்கள், முக்கியநிலைப் பாடு குறித்து ஆய்வு செய்து வெளியிட்டுள்ளோம்.

மாநிலத்தில் சுயாட்சிதான் இந்திய ஜனநாயகத்தை கூட்டாட்சியில் தத்துவத்தையும் நிலை நாட்டி அனைத்து மாநிலங்களுக்கும் தேவை என்பதையும், கவர்னர்பதவி அகற்றப்பட வேண்டிய ஒன்று என்றும் இதில் வலியுறுத்தப்பட்டுள்ளது. கவர்னர் பதவி ஜனநாயகத்திற்கு கேடு விளைவிக்கிறது.

**முதல்வர் விரைந்து நடவடிக்கை எடுக்கிறார்!**

'அமெரிக்க ஐக்கிய நாடுகள் போல இந்திய ஐக்கிய நாடுகள் என அமைக்கப்பட வேண்டும் என்று வலியுறுத்தப்பட்டுள்ளது. தொலை நோக்கு கண்ணோட்டத்தில் இந்த அறிக்கை தயாரித்திருக்கிறோம்.

தமிழகத்தில் பாலியல் வன்கொடுமை குறைந்து இருக்கிறது. முதலமைச்சர் விரைந்து நடவடிக்கை எடுத்துவருகிறார். விளாத்தி குளம் மாணவி சம்பவத்திலும் பாலியல் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. குற்றங்க ளுக்கு முக்கிய காரணம் போதைப் பொருள் பழக்கமாகும். போதைப் பொருள் பயன்பாட்டை தடுக்க புதிய சட்டம் கொண்டு வர வேண்டும்.

தி.மு.க. கூட்டணியில் நிறைய கட்சிகள்இடம்பெற் றுள்ளன. அதனால் முதல் அமைச்சருக்கு பல நெருக்க டிகள் ஏற்பட்டு உள்ளது. நிறைய கட்சிகளின் நிர்ப்பந்தம் இருக்கிறது.

**கலைஞரிடம் வாக்கு அளித்திருக்கிறேன்!**

எனது 63 வருடஅரசியல் வாழ்வில் 32 வருடம் தி.மு.க.வுடன் பயணித்திருக்கிறேன். கலைஞரின் இறுதி நாட்களில் நான் அவரிடம் ஒரு வாக்கு கொடுத்தேன். ஒரு காலத்தில் உங்களுக்கு பக்கபலமாகநான்இருந்தது போல தம்பி ஸ்டாலினுக்கும் உறுதுணையாக இருப்பேன் என்று வாக்கு கொடுத்தேன். அந்த வாக்குறுதியை நிறைவேற்றும் வகையில் இதனை ஏற்றுக் கொண்டேன். அந்த நிலையில் என் கையை முதலமைச்சர் பிடித்துக் கொண்டார்.

அவர் சொன்ன தொகுதிகளை மகிழ்ச்சியோடு ஏற்றுக் கொண்டேன். எங்கள் கட்சி நிர்வாகிகளுக்கு அது சற்று வருத்தமளித்தாலும் அனைவரும் ஏற்றுக் கொண்டார்கள். தொகுதிகள் குறைத்ததை பொருட்டாக நினைக்கவில்லை.

**மோடி அமெரிக்காவின் ஊதுகுழலாக செயல்படுகிறார்!**

கூட்டணி கட்சிகளுக்கு தொகுதி பங்கீடு முடிந்த பிறகு எந்த தொகுதியில் போட்டியிடுவதுஎன்பதைப் பற்றி முடிவு செய்வோம். சமையல் கேஸ் தட்டுப்பாட்டுக்கு பிரதமர் மோடிதான் காரணம்.

அவர் அமெரிக்காவின் ஊதுகுழலாக செயல்படுகி றார். கனிமவளம் பிற மாநி லங்களுக்கு கடத்தப்படுவதை தடுக்க வேண்டும் என்று தொடர்ந்து வலியு றுத்தி வருகிறோம்.

இவ்வாறு வைகோ அவர்கள் கூறினார்.

## வேலூர் தெற்கு மாவட்டத்தில் அடங்கிய

# மூன்று சட்டமன்றத் தொகுதிகளிலும் வென்றிட தீவிர களப்பணியாற்றுவோம்!

### மாவட்டக் கழக செயற்குழுக் கூட்டத்தில் தீர்மானம்!

வேலூர், மார்ச் 19 -

வேலூர் தெற்கு மாவட்டத்தில் அடங்கிய மூன்று சட்டமன்றத் தொகுதிகளிலும் வென்றிட தீவிர களப் பணியாற்றுவோம் என்று வேலூர் தெற்கு மாவட்டக் கழக அவசர செயற்குழுக் கூட்டத்தில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது.

வேலூர் தெற்கு மாவட்ட தி.மு.க. அலுவலகத்தில் மாவட்ட அவசர செயற்குழு கூட்டம் மாவட்ட அவைத் தலைவர் தி.அ.முகமதுசகி தலைமையில் நடைபெற்றது தெற்கு மாவட்டப் பொறுப்பாளர் ஏ.பி.நந்தகுமார் எம்.எல்.ஏ. சிறப்புரை ஆற்றினார்.

நிகழ்ச்சியில் மாநகர செயலாளர் ப.கார்த்தி கேயன் எம்.எல்.ஏ., குடியாத்தம் சட்டமன்ற உறுப்பினர் அமுலு விஜயன் மாவட்ட துணை செயலாளர்கள் ஜி.எஸ். அரசு, முனைவர் எம்.பிரபாத்குமார் மாவட்ட பொருளாளர் எஸ்.தாமோதரன், மாவட்ட ஊராட்சி குழுதலைவர் மு.பாபு, மாநகராட்சி மேயர் சுஜாதா ஆனந்தகுமார், முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் ஞானசேகரன், செயற்குழு உறுப்பினர்கள் ஆர்.பி.ஏழுமலை, ஏ.ஜி.ஆறுமுகம், மாநில மருத்துவ அணி துணை செயலாளர் ராஜேஸ்வரி, மோகன்காந்தி மற்றும் மாநில, மாவட்ட நிர்வாகிகள், கழக நிர்வாகிகள், நகர, ஒன்றிய, பகுதி, பேரூர் கழக செயலாளர்கள், தலைமைச் செயற்குழு, பொதுக்குழு உறுப்பினர்கள், கழக நிர்வாகிகள் கலந்து கொண்டனர். கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்கள் வருமாறு:

வெல்வோம் 200 படைப்போம் வரலாறு என்ற வெற்றி இலக்குடனும் தமிழ்நாடு வெல்லட்டும் ஸ்டாலின் தொடரட்டும் என்றமுழக்கத்துடனும் எதிர் வரும் 2026 ஏப்ரல் 23ஆம் தேதி நடைபெற உள்ள சட்டமன்ற தேர்தலில் தமிழ்நாட்டு மக்கள் அனைவரும் தங்களது வாக்குகளை வெற்றி சின்னமாம் உதயசூரியன் சின்னத்திலும் நமது மதச்சார்பற்ற கூட்டணி யினரின் சின்னங்களிலும் அளித்திட அயராது பாடுபட்டு திராவிட மாடல் 2.0 அமையும் நாள் வரை ஊன் உறக்க மின்றி அயராது தேர்தல் களப்பணி ஆற்றிடுவோம்.

வேலூர் தெற்கு மாவட்ட தி.மு.க.விற்கு ட்பட்ட 3 சட்டமன்ற தொகுதிகளில் கழக தலைவர் அறிவிக்கும் வேட்பாளர்களின் வெற்றிக்கு ஒத்த கருத்துடன் தேர்தல் களப்பணி ஆற்றி 3 தொகுதிகளிலும் வெற்றிக்கனி பறித்து கழகத் தலைவர் அவர்களின் கரங்களில் சேர்த்திட இன்று முதல் தேர்தல் களப்பணி ஆற்றிட ஆயத்தமாகு வோம்.

மதம் மற்றும் மொழி துவேச அரசியலை தனது அடிமை அதிமுக வுடன் கூட்டு சேர்ந்து தமிழ் நாட்டை கபளீகரம் செய்து அதன்மூலம் ஆர்.எஸ்.எஸ் சின் கொள்கைகளை நிறைவேற்ற துடிக்கும் ஒன்றிய பாசிசபாஜகவை

நமதுமதசார்பற்ற முற்போக்கு கூட்டணியின் ஒருமித்த பலத்தோடு தோற்கடித்து அதன் மூலம் தேர்தலில் வெற்றி பெற்று தமிழ்நாட்டில் மீண்டும் திராவிட மாடல் ஆட்சியை கழக தலைவர் அவர்கள் தலைமையில் இரண்டாவது முறையாக அரிய ணையில் ஏற்றி தமிழ் நாட்டை உலக அரங்கில் அனைத்திலும் சிறந்த மாநிலம் எனபோற்றிடும் வகையில் ஒன்றிணைவோம் வெல்வோம் ஒன்றாக என சபதம் ஏற்று களப்பணி ஆற்றிடுவோம்.

இவ்வாறு தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

## மாதவரம் வடக்குப் பகுதி திமுக நிர்வாகிகள் –

# வட்டச் செயலாளர்கள், பாக முகவர்கள் ஆலோசனைக் கூட்டம்!

### பகுதிச் செயலாளர் புழல் எம்.நாராயணன் வேண்டுகோள்!

மாதவரம், மார்ச் 19-

மாதவரம் வடக்குப் பகுதிச் செயலாளர் புழல் எம். நாராயணன் விடுத்துள்ள அறிக்கை வருமாறு:

மாதவரம் வடக்கு பகுதி திமுக ஆலோசனைக் கூட்டம் வரும் 20.3.2026 வெள்ளிக்கிழமை மாலை 5 மணிக்கு, மாத்தூர் 19வது வட்டம் ராகவேந்திரா திருமண மண்டபத்தில் பகுதி அவைத்தலைவர் வி.திராவிடவீரன் தலைமையில் ஆலோசனைக் கூட்டம் நடைபெற உள்ளது.

அது சமயம் மாதவரம் வடக்கு பகுதிக்குட்பட்ட மாவட்ட, பகுதி நிர்வாகிகள், வட்டச் செயலாளர்கள், வட்ட நிர்வாகிகள், அணிகளின் அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள், பாக முகவர்கள், பாக உறுப்பினர்கள், பாக இளைஞர்கள், பாக தகவல் தொழில் நுட்ப அணி நிர்வாகிகள், கழக முன்னோடிகள், உள்ளாட்சி பிரதிநிதிகள் என அனைவரும் தவறாமல் கலந்து கொண்டு கூட்டத்தை சிறப்பிக்குமாறு அன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

பொருள் : 2026 சட்டமன்றத் தேர்தல் மற்றும் கழக ஆக்க பணிகள்

இவ்வாறு மாதவரம் வடக்கு பகுதி செயலாளர் புழல் எம். நாராயணன் வேண்டுகோள் விடுத்துள்ளார்.



மாதவரம் வடக்கு பகுதி 23 வது வட்டம் மெர்சி நகர் பகுதியில் வெல்லும் தமிழ் பெண்கள் வீடு வீடாகச் சென்று திராவிட மாடல அரசின் சாதனைகளை விளக்கி தீவிர பிரச்சாரத்தில் ஈடுபட்டனர். வட்டச் செயலாளர் பி. எஸ். சந்துரு முன்னிலையில் நடைபெற்ற பிரச்சாரத்தில் மாதவரம் வடக்கு பகுதி செயலாளர் புழல் எம். நாராயணன் நேரில் சென்று பணிகளை துரிதப்படுத்தினார். வட்ட அவைத் தலைவர் டி.எழில் குமார், பகுதி மகளிர் அணி சகிலா, ஜமால் பாஷா மற்றும் மகளிர் அணி உடன் உள்ளனர்.